# ஆதிரை புதினத்தில் ஈழத்தமிழர்களின் அவல நிலைப் பதிவுகள்

# Records of the plight of the Eelamites in Adirai Puthinam

**கோபாலகிருஷ்ணன். வ**, தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 636 005

**Gopalakrishnan. V**, Department of Tamil, Sona College of Arts and Scinece, Salem-636 005

ORCID : https://orcid.org/0000-0002-9465-4421

DOI: 10.5281/zenodo.14653397

## Abstract

Heavy books in the common library has taught me

many bitter truths lessons-kshatriyas community tamil writer

Food, clothing and shelters are considered to be the basic amenities has not been provided to A common person, his or her life will be doomed.These are the basic needs of a human being from his birth.If he has been deprived his life will be ultimately lead to various traumas.Srilankan people are marginalised and had to undergo many problems in their daily life beyond limits at the same time their life seems to be insecure. on the other hand the world countries remained spectators rather than taking any action.Though the others remained passive, a writer has never hesitated to bring in this sad plight into the light.As a result collection of short story entitled "Buddha" was rewritten in the name of Adhirai by Samanthan.This paper de codes the voice of the subalterns who are left unnoticed in this society.

## ஆய்வுச்சாரம்

**“பொதுசன நூலகங்களில் இருக்கின்ற**
**கனமான புத்தகங்கள் எனக்கு வாழ்வின்**
**பல மோசமான உண்மைகளைக் கற்றுத்தந்திருக்கின்றன.”**
**-ஈழத்து எழுத்தாளர் முனியப்பதாசன்**

மனிதனின் இன்றியமையாத தேவைகளாகக் கருதப்படுவன உணவு, உடை, உறைவிடம் ஆகியவையாகும். இம்மூன்றும் மனித சமூகத்திற்குச் சரியாக அமையவில்லையென்றால் அச்சமூகம் முன்னேறிய சமூகமாகக் கருதப்படமாட்டாது. அடிப்படையில் அனைத்துவிதமான உரிமைகளைப் பெற்றவராக மனிதகுலம் திகழவேண்டும். அவ்வாறு இல்லையெனில் கொடுமைக்கு ஆட்படுத்தியிருப்பார்கள் என்பதை அனுமானிக்கலாம். ஆனால் இலங்கை தமிழர்களுக்கு இதைவிட மிகப்பெரிய உரிமை மீறல்கள் நடந்தேறியுள்ளன. பாதுகாப்பற்ற நிலையில் தங்களின் வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருந்தார்கள். உலக நாடுகள் இந்நிலையைப் பார்த்துக்கொண்டிருந்ததே தவிர தடுப்பதற்கான முயற்சிகளைச் சிறிதளவும்கூட எடுக்க

முன்வரவில்லை என்றே கூறலாம். இருப்பினும் எழுத்தாளன் இப்படிப்பட்டவன் அல்ல. தன் எழுத்தின் மூலம் உலக சமுதாயத்திற்கு இந்நிலையைக் கண்முன்னே கொண்டுவரும் நோக்கில் படைப்பாக உருவாக்கியுள்ளான். 'புத்தா' என்னும் சிறுகதையாக இருந்த கருவினை சயந்தன் அவர்கள் ஆதிரை எனும் ஈழத்தமிழர்களைக் குறித்த புதினமாக விரிவாக உருவாக்கியுள்ளார். இதில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை யாரும் கேட்காமல் நீர்த்துப்போன நிலையினை அழகுற எடுத்தியம்புகிறார் ஆசிரியர். இதனைக் குறித்து சிந்திப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords:** subaltern, marginalised, ostricised, depression, poverty, suicidal, natural calamities

ஈழமக்களின் அவலங்கள், நாடோடிகளைப் போல திரிதல், பொருளாதார நிலை, வறுமை நிலை, தகவல் தொடர்பு வசதியின்மை, வாழ்க்கை விரக்தி, இறப்பிற்குத் துணிதல், இயற்கையின் சீற்றம்

**ஈழமக்களின் அவலங்கள்**

ஈழமக்களின் அவலங்கள் எண்ணிலடங்காதவைகளாகும். குறிப்பாக, ஆதிரை புதினத்தில் நாடோடிகளைப் போல திரிதல், பொருளாதார நிலை, வறுமை நிலை, தகவல் தொடர்பு வசதியின்மை, வாழ்க்கையில் விரக்தி, இறப்பிற்கு துணிதல், இயற்கையின் சீற்றம் போன்ற எண்ணற்ற அவலநிலைகள் புதினத்தில் காணப்படுகின்றன.

**நாடோடிகளைப் போல திரிதல்**

இலங்கையில் தமிழ்மக்கள் வாழ்ந்த இடங்களில் ஒன்று மலையகத்திலுள்ள தோட்டக்காடு. இப்பகுதியில் ஒரு நாள் இரவு நேரத்தில் சிங்களர்கள் அங்கு வாழ்ந்த தமிழர்களின் வீடுகளைக் கொழுத்தி விட்டு கொள்ளையடித்தனர். எதிர்த்துக் கேட்டவர்களைத் தடியால் அடித்து உதைத்தனர். இதனை, “சீமையெண்ணையை ஊத்தி கொழுத்துறாங்க. நம்மளத் தோட்டக் காட்டாங்கிறான். இன்னொருத்தன் நாட்டைவிட்டு ஓடுங்கிறான். நான் எங்க போவேன் இந்தியால எனக்கு என்ன இருக்கு.”(சயந்தன், ஆதிரை, ப.18) என்னும் கூற்றின் வாயிலாக அறியலாம். தமிழ் மக்கள் நாட்டில் தமக்கென உரிமையைக் கேட்டுப் போராடினார்கள். சிங்கள மொழியைப் பேசும் மக்கள் உங்கள் நாடு இது இல்லை. நீங்கள் இந்தியாவிற்குச் செல்லுங்கள் என்று விரட்டியடித்தனர். மேலும், அவர்களின் வீட்டிற்குள் புகுந்து கொள்ளையடித்தார்கள்.

மக்கள் தங்கள் குழந்தைகள் மற்றும் உறவினர்களுடன் காவலர்களிடம் தஞ்சம் புகுந்தனர். பின்பு வவுனியாவிற்குச் சென்றனர். சிங்கமலை தன் நண்பர்கள் உதவியுடன் காட்டுப்புலவு என்ற பகுதியில் தனது பிள்ளைகளான லெட்சுமணன், வல்லியாள் இவர்களுடன் குடி பெயர்ந்தான். இதனை மேற்கண்ட கூற்று விளக்குகின்றது.

இலங்கையில் நெடுங்கேணி என்ற பகுதிக்கு எல்லாத் திசைகளிலிருந்தும் மூட்டை முடிச்சிகளோடு, மக்கள் போவதற்கு இடம் தெரியாமல் வந்து கொண்டிருந்தார்கள். பள்ளிக்கூடத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், அங்கேயும் வெடிகுண்டுகள் போடப்பட்டதால் மக்களால் இருக்க முடியவில்லை. மீண்டும் இருக்க இடம்தேடி அலையத் தொடங்கினார்கள். இந்நிலையில், “ஊரடங்கு

சட்டம் விளக்கப்பட்டதாக அறிந்த ஒரு பின்னேரப் பொழுது மூதாதையர்களின் மூச்சுக்காற்றுக்களைத் திரும்பப் பெற்றதுபோல் வீட்டின் கூண்டைத் திறந்து வைத்தாள்" (மேலது, ப.195) எனப் பதிவு செய்கிறார் ஆசிரியர். இதில் தனிக்கல்லடி என்ற பகுதியில் ஊரடங்கு சட்டம் விலக்கப்பட்டதால் மக்கள் அப்பகுதியை விட்டு வெளியேறிச் சென்றார்கள். அப்பகுதியில் இராணுவர்கள் முகாமை அமைத்தனர். குண்டு சத்தத்திலும் வாகன சத்தத்திலும் இருக்க முடியாது என்று அங்கிருந்து சங்கிலி, மீனாட்சி, ராணி, அத்தார், சந்திரா எனப் பலரும் வெளியேறினார்கள். கன்றுகளையும், பசுக்களையும் அவிழ்த்துவிட்ட மீனாட்சி உயிரோடு இருந்தால் சந்திப்போம் எனக் கடந்துச் சென்றாள். வெள்ளையக்கா கை, கால் விலங்காத அம்மாவை சைக்கிளில் உட்கார வைத்துத் தள்ளிக்கொண்டு சென்றாள். அனைவரும் புதுக்குடியிருப்புப் பகுதியை அடைந்தார்கள். மேலும், மேட்டுக்காணி, எட்டேக்கர் என ஒவ்வொரு இடமாக மக்கள் நாடோடிகளைப் போல அலைந்தனர். மனித உரிமைச் சட்டங்கள் இருந்தும் நாடோடிகளாக மக்கள் திகழ்கின்றனர். இவ்வாறாக மனித உரிமைச் சட்டங்கள் மனித சமூகத்திற்குப் பல்வேறு விதத்தில் கருத்துக்களைப் பதிவு செய்தாலும் இலங்கையில் மனித உரிமைகள் என்பது மீறப்பட்டு நாடோடிகளாகத் திரிவதும் இனப்படுகொலை செய்வதும் போன்ற பல அவலங்கள் நிறைவேறியுள்ளன.

**பொருளாதார நிலை**

ஒருவனின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பது அவர்களின் பொருளாதார நிலையே ஆகும். பொருளாதார நிலை சீராக இருக்கும் நிலையில் அவனுடைய வாழ்க்கையும் சீராகச் செல்லும். இம்முக்கியமான பொருளாதாரத்தைக் குறித்து, "மனிதனின் வாழ்க்கைப் பொருளே ஆதாரமாக அமைகிறது. நாகரிக மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகியவை அடிப்படைத் தேவைகளாக இருக்கின்றன. மனிதன் நாடோடியாக வாழ்ந்த நிலைமாறி ஓரிடத்தில் தங்கி வாழத் தொடங்கியபோது மனிதனின் தேவைகள் அதிக முக்கியத்துவம் பெற்றன. மனிதன் தனது தேவைகளை நிறைவு கொள்ளுவதற்கான மூலப்பொருட்களை இயற்கையிலிருந்தே கண்டறிந்து கொண்டான். எனவே, மனிதனின் இயல்பான வாழ்க்கைக்குப் பொருளே ஆதாரமாய் அமைகிறது எனலாம்."(நா.கருணாமூர்த்தி, தமிழ் நாவல்களில் விவசாயத் தொழிலாளர்கள், பக்.103.104) இந்நிலையானது மாறி இலங்கையில் வாழ்ந்த தமிழர்களை அங்கு நடந்த போராட்டத்தால் நிலையான இடத்தில் வாழமுடியாமல் அகதிகளாக வாழ்ந்தனர். அவர்களை வறுமை நிலையிலேயே வாழ்ந்தார்கள் இதைக் குறித்து, "உழைப்புக்கும் பிழைப்புக்கும் சரியாய் போயிற்று. மலையில் வீட்டிலும் சட்டிப்பானைகள், உடுத்துணிகள், இரண்டு தகரப்பெட்டிகள் தவிர வேறென்ன இருக்கிறது?" (சயந்தன், ஆதிரை, ப.33) என்பதிலிருந்து சிங்கமலை என்பவன் தன் வாழ்ந்த நிலையைக் கூறுகிறான். உழைத்த காசு அன்றாட பிழைப்பிற்கே சரியாகப்போனது. சட்டிப்பானைகள், உடுத்தியத் துணிகள், தகரப்பெட்டி, ஒழுகும் நிலையில் உள்ள வீடு என வறுமையில் வாழ்ந்த நிலையை, உடுத்த துணிக்கூட இல்லாமல் அகதிகளாக வாழும் நிலையில் உள்ளனர். மேலும், குடும்பத்தைக் காக்க பெண்களும் கூலி வேலைக்குச் சென்றுள்ளனர் என ஆசிரியர் சயந்தன் பதிவு செய்கிறார்.

நடராசன் என்பவன் கிடைக்கின்ற கூலி வேலைக்குச் சென்று வந்தான். நிரந்திரமில்லாத வருமானத்தால் இரண்டு பிள்ளைகளுக்கும் கஞ்சி ஊற்றவே

பெரும்பாடாயிருந்தது. அவள் மனைவி களி, கஞ்சி, சுட்டமரவள்ளிக் கிழங்கு எனச் சமாளித்துக் கொண்டாள். மீனாட்சியின் கணவன் சங்கிலி இறந்த பின் உடுத்துவதற்குக்கூட ஒரு நல்ல சட்டை இல்லை. பாலை மறந்த குழந்தைக்குச் சத்துணவு எதுவும் வாங்கித் தரமுடியாமல் வறுமையில் வாடுவதையும் நாவலில் காணமுடிகின்றது.

**வறுமை நிலை**

மனிதன் அன்றாட தேவைகளைக்கூட பூர்த்தி செய்துகொள்ள பணம் இல்லாத சூழ்நிலையே வறுமையாகும். இவ்வறுமை நிலைக்குறித்து, "மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற வறுமையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படையாக அமைகிறது. வறுமை காரணமா உணவுத் தேவையை நிறைவு செய்ய முடியாத பொழுது மனிதனின் பிறதேவைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளும்கூட நிறைவேற்றப்படாமலேயே இருந்துவிடுகின்றன. இதனால் உழைக்கும் மக்கள் மிகுந்த சிரமத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாகின்றனர். இதுவும் சமூக அவலத்திற்கு அடிப்படையாக அமைந்துவிடுகிறது."(கோ.கேசவன், சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும், ப.140) இத்தகைய சூழல் இலங்கையில் நிலவியது. அதனால்தான், கூரையைவேயக்கூட முடியாத சூழ்நிலையை எண்ணி அத்தாரும், சந்திராவும் வேதனைப்பட்டனர். இராணுவர்கள் இடங்களை ஆக்ரமித்தால் வேறு இடத்திற்குப் புறப்பட்ட மக்கள் காய்ந்த முகத்தோடு எண்ணெய் இல்லாத தலையோடும், இளைத்த தேகத்தோடும் சுற்றித் திரிந்தார்கள். உறங்குவதற்கு சிமெண்ட் சாக்குப் பைகளும் பயன்படுத்தப்பட்டது. அவர்களுக்கென ஒரு போர்வைக்கூட இல்லாத நிலையிருந்தது. இவர்கள் முகாம்களில் தங்கியிருந்த பொழுதும் காலையிலேயே எழுந்து ஏதாவது கூலி வேலைக்கிடைக்குமா எனத் தேடி அலைவான். வேலை ஏதாவது கிடைத்தால் காசு வேண்டாம் மாவு இல்லையென்றால் அரிசி தரும்படி கேட்டுவாங்கி வருவான். இதன் மூலம் அவர்களின் வறுமை நிலை புலப்பட்டு நிற்பதைக் காணலாம்.

**தகவல் தொடர்பு வசதியின்மை**

கலவர நாட்களில் ஆமிக்காரர்கள் ஆடிய வெறியாட்டம் மறுநாளே மக்களுக்குத் தெரிந்தது. தகவல் தொடர்பு பெரிதாக வளரவில்லை. யாழ்ப்பாணத்தில் என்ன நிலவரம் என்று தெரியாமல் போனது. சந்திரா நெஞ்சுத் தண்ணீர் வற்றிப்போக என்ன நடந்தது என்று தெரியாமல் கதறுவாள். எந்தப் பகுதியில் என்ன நடந்தாலும் உடனே தெரியாத நிலையிருந்தது. இதனை, "ஒதியமலை பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட தகவல் பத்துமணி போலத்தான் பரவியது. எறும்புகள் விலகிச் செல்வதுபோல சட்டென்று சந்தை கலைந்துவிட்டது."(சயந்தன், ஆதிரை, ப.119) என்று புதினத்தில் வரும் நடராசனும் ஒதியமலையிலும் உள்ள மக்களைச் சுட்டுக்கொன்ற செய்தி பத்துமணிக்கு மேலேதான் அத்தாருக்கும், சங்கிலிக்கும் தெரியவந்தது. இதிலிருந்து செய்திகள் வேகமாகப் பரவ எந்த வசதியும் இல்லை என்பதை அறியலாம்.

**வாழ்க்கை விரக்தி**

ஒரு இளைஞனைப் புலி எனக்கூறி அடித்து உதைத்து இராணுவர்கள் கொடுமைப்படுத்தினார்கள். அந்த இளைஞனின் அக்கா அவனை அடித்துக் கொடுமைப்படுத்துவதைத் தாங்க முடியாமல் வாழ்க்கையை வெறுத்து தன்னையும்

கொல்லுமாறு இராணுவத்தினரிடம் கெஞ்சுவதைப் புதினத்தில் காணமுடிகின்றது. இதனை, "இரண்டு சிப்பாய்கள் ஓர் இளைஞனின் கையைப் பிடித்துக் கொறகொறவெனத் தரையில் இழுத்து வந்தார்கள். கிழிந்த துணிப்போல அவனுடைய உடல் தரையில் தேய்ந்தது."(மேலது, ப.159) என்னும் வரிகள் மூலம் அறியலாம். வாலிபனை அடித்துக் கொன்றதைப் பார்த்து இவ்வாழ்க்கை வேண்டவே வேண்டாம் என்று நினைக்கும் அளவிற்கு வெறுத்து ஒதுக்குவதையும் கதையில் காணலாம். மேலும், வெள்ளையன் என்பவன் தன் இரு மகள்களான இசைநிலா, ஒளிநிலா, மனைவி முத்து இவர்களோடு பதுங்கு குழியில் பதுங்கியிருந்தான். பதுங்கு குழிக்கு மேலே குண்டுகள் விழும் சத்தம் உயிரை நடுங்க வைத்தது. இந்நிலையானது 'என்ன வாழ்க்கையென' மனம் வெறுக்கத்தக்க நிலையினைப் புதினத்தின் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

### இறப்பிற்குத் துணிதல்

இராணுவர்கள் தாக்கி இறந்த ஒருவனின் உடலில் புழு நெளிவதைப் பார்த்து மனம் வெறுத்துப்போகும் நிலையையும் நாவலில் காணமுடிகிறது. ஒரு குழந்தையைப் போல இறப்பு நம்முடைய கையைப் பிடித்துக்கொண்டு வருகின்றது என மயில்குஞ்சான் இறப்பிற்குத் துணிந்தான். புலி இயக்கத்தினர் சாவிற்கு துணிந்தே இராணுவர்களை எதிர்த்து அடித்தார்கள். பெண் போராளிகளும் இராணுவர் கையில் சிக்கி மானத்தை இழப்பதற்குத் தாமே குப்பியைக் கடித்து உயிரை விட்டுவிடலாம் என நினைத்தனர். இத்தகைய அவலத்தை, "இனிமேல் இந்த மண்ணில் சாவு ஒரு குழந்தைப்பிள்ளை மாதிரி எங்கடை கையைப் பிடிச்சுக்கொண்டு திரியப்போகுது"(மேலது, ப.165) என ஆசிரியர் குறிப்பிடுகிறார். புதுக்குடியிருப்புப் பகுதியில் நடந்த சண்டையில் தன் இருமகன்களையும் தீயில் பறிகொடுத்துவிட்டு கதறி அழுகின்ற நிலையை இக்கூற்று விளக்கி நிற்பதைக் காணமுடிகின்றது.

### இயற்கையின் சீற்றம்

யாருடைய தூண்டுதலும் இல்லாமல் தாமாகவே நடக்கும் செயலை இயற்கை என்கிறோம். மரம், செடி, கொடி, மழை, காற்று இவையெல்லாம் இயற்கையாகக் கொள்ளப்படுகின்றன. இயற்கையை யாராலும் மாற்ற முடியாது. அனைவரையும் வாழ வைக்கும் இயற்கையே, அழிக்கவும் செய்கின்றது. இயற்கையின் சீற்றம் மக்களுக்கு தரும் துன்பத்தை அதாவது, "ஊஉஊஊ என்ற காற்றின் ஊளையோடு வாழையிலைகள் சடசடவென்று ஆடின."(மேலது, ப.99) என்பதை வெள்ளையக்கா ஆட்டிற்குப் புல் அறுத்துக்கொண்டு வயல்வெளியில் நின்றுக்கொண்டிருந்தாள். அப்பொழுது பேரிரைச்சலோடு மழைப் பெய்தது. தாங்கள் கடவுளாய் மதிக்கும் இத்திமரமும் சாய்ந்தது. இதனை அம்மக்கள் தீயநிமித்தமாக எண்ணினார்கள். இரண்டாவதுநாள் மழைநீர் வீடுகளுக்குள் நுழைந்தது. இவ்வாறு இலங்கை இராணுவம் மட்டுமின்றி இயற்கையும் தமிழ் மக்களைத் துன்புறுத்தியது. இதுமட்டுமல்லாமல் சுனாமியும் தமிழர்களை விட்டுவைக்கவில்லை என்பதை அக்காலக்கட்ட நிலையை வைத்து அறியலாம். மட்டக்கிளப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் தமிழின மக்களைக் குறிப்பார்த்து இச்சுனாமி அழித்தது என்றே கூறலாம்.

இயற்கையும்கூட ஈழத்தமிழ் மக்களை நாடோடிகளாக அலையச்செய்தது என்பதை ஆசிரியர் சயந்தன் ஆதிரை என்னும் இந்நாவலின் வழியாக உணர்த்தியுள்ளார்.

இயற்கையும் மக்களின் வாழ்க்கையில் விளையாடியதை இங்கு உணர்ந்துகொள்ளலாம். இயற்கை மக்களை வாழவும் வைக்கிறது, அழிக்கவும் செய்கிறது என்பதை இந்நாவல் உணர்த்தி நிற்கிறது. ஆகவே இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக ஈழத்தமிழர்கள் நாடோடிகளைப் போன்றும், பொருளாதார நிலையில் பின்தங்கியும், மிகுந்த வறுமை நிலையிலும், தகவல் தொடர்பு வசதியின்மையாலும், வாழ்க்கை விரக்தியினால் இறப்பிற்குத் துணிதல், இயற்கையின் சீற்றத்தால் மனவேதனை அடைந்ததையும் வெளிப்படுத்தியிருப்பதை அறிகின்றோம்.

**துணைநின்ற நூல்கள்**


1. சயந்தன், ஆதிரை,(ISBN: 978-624-97325-4-4) ஆதிரை வெளியீடு, தமிழினி பதிப்பகம், நாச்சியம்மை நகர், சென்னை-51. 2010.
2. கருணாமூர்த்தி.நா, தமிழ் நாவல்களில் விவசாயத் தொழிலாளர்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98. 2012.
3. கேசவன்.கோ, சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும், சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம், 1994.


**References**


1. Sayandhan, Aathirai, (ISBN: 978-624-97325-4-4) Aathirai Publication, Thamizhini Publisher, Natchiammai Nagar, Chennai-51.2010.
2. Karunaamoorththi.Naa, Tamil Novelgalil Vivasaya Thozhilaalargal, New Century Book House, 41-B, Sidco Industrial Estate, Ambattur, Chennai-98. 2012.
3. Kesavan.G, Samuga Viduthalaium Thaalththappattorum, Saravana Balu Publication, Viluppuram, 1994.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**கோபாலகிருஷ்ணன். வ, “ஆதிரை புதினத்தில் ஈழத்தமிழர்களின் அவல நிலைப் பதிவுகள்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 5, சனவரி 2025, பக். 27-32


**Cite this Article in English**


**Gopalakrishnan. V, “Records of the plight of the Eelamites in Adirai Puthinam”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 5, January 2025, pp. 27-32